# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | பாஸ்கா காலத்தின் 7 ஆம் ஞாயிறு | 1 ஜூன் 2025
(உலக சமூகத் தொடர்பு ஞாயிறு)

**எதிர்நோக்கிய திருப்பயணிகளாகக் கொண்டாடுதல், செவிமடுத்தல், மற்றும் பயணித்தல்**

மாதாந்திர நோக்கம் மற்றும் கருப்பொருள்:

திருஅவை - இரக்கமுள்ளது ஒருவர் ஒருவரில் இயேசுவின் திருமுகத்தைக் காண அழைப்பு

# கடவுளின் மக்கள், இரக்கத்தின் மக்கள்

2 ஆம் வத்திக்கான் ஏடான லுமென் ஜெண்டியம்(உலகின் ஒளி) நம்மை கடவுளின் மக்கள் என்று அழைக்கிறது. அதனுடைய வரலாற்றின் காரணமாக இது மிகவும் அர்த்தமுள்ளதாக நமது அடையாளத்தை நமக்குத் தருகிறது, மற்றும் நாம் யார் என்பதையும் நமக்குச் சொல்கிறது. கடவுள் நம்மைத் தம்முடையவர்கள் என்று அழைத்த நீண்ட சந்ததியிலிருந்து நாம் வருகிறோம். முதலில் சீனாய் மலையில் ஏற்படுத்திய உடன்படிக்கையில் தொடங்கி, இப்போது கிறிஸ்துவில் முழுமையடைந்துள்ளது. கடவுளின் மக்கள் என்னும் சொல், நம்மை கடவுளின் மக்களாக அதாவது தேர்தெடுக்கப்பட்ட, அழைக்கப்பட்ட மற்றும் அன்பு செய்யப்பட்ட மக்கள் என்று விவரிக்கின்றது.



இதை அறிந்துள்ள நமக்கு, இந்த ஆவணம் நாம் அருள்பணியாளர்களாக, இறைவாக்குரைக்கும் மக்களாக நாம் மறுமொழி தர நம்மை அழைக்கின்றது. திருமுழுக்கின் வழி கடவுளை ஏற்றுக்கொண்ட மக்களாக, தூய வாழ்வு வாழ நாம் அழைக்கப்பட்டுள்ளது ஒரு அர்த்தமுள்ளதாக இருக்கிறது. சிலசமயங்களில் “தூயது” என்ற சொல், நிறைவு என்று குழப்பிக்கொள்கிறோம். இது வேறொரு நாளுக்கான தலைப்பு. தூயது என்பது கடவுளில் வேரூன்றி உலகிலிருந்து தனித்து வாழும் வாழ்க்கை, தூயவாழ்வு வாழ அழைக்கப்படும் அழைப்பு, நமது இறைவேண்டல், நம்முடைய வழிபாடு, எவ்வாறு நாம் அன்பு செய்கிறோம், எவ்வாறு கிறிஸ்துவுக்கு சாட்சியாக இருக்கிறோம் என்பதில் வெளிப்படுத்தப்படுகிறது.

எனவே, திருஅவை என்பது நாம் வெறுமனே செல்லும் இடம் மட்டுமல்ல; அது நாம் ஒன்றித்திருக்கும் இடம். ஆழமான ஒன்றிப்பின் அடையாளம். ஒரு அருளடையாளம். நம்முடைய வாழ்வு நம்மையும் தாண்டி, அதாவது கடவுள் எல்லா மக்களுக்கும் விரும்பும் ஒற்றுமை என்னும் எதிர்நோக்கை நமக்குத் தருகிறது. திருஅவையாக நமது அடையாளத்திற்கு நாம் உண்மையாக இருக்கும்போது, நாம் ஒருவரையொருவர் காணவும், குறிப்பாக உலகம் கவனிக்கத் தவறியவர்களை நாம் காணும்போது, அவர்களுக்கு இயேசுவின் முகத்தைக் காட்டுகின்றோம்.

இன்று நம்மில் பலரும் அர்த்தத்தையும், குணமளித்தலையும், ஒருவேளை முன்னேறுவதற்கான வழியையும் தேடுகிறோம் தேடிக்கொண்டிருக்கிறோம். இருப்பினும் அனைத்துப் போராட்டங்களுக்கு மத்தியிலும் திருஅவை நமக்கு இன்னும் ஒரு உண்மையானதைத் தருகிறது. ஒரு வழி. ஒரு வாக்குறுதி, ஒரு உடனிருப்பு.

எசாயா கூறுகிறார்: நீங்களோ, ஆண்டவரின் குருக்கள் என்று அழைக்கப்படுவீர்கள்; நம் கடவுளின் திருப்பணியாளர் என்று பெயர் பெறுவீர்கள்(எசா: 61:6). மேலும் பேதுருவும் நமக்கு நினைவூட்டுகிறார். “நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமரபினர், அரச குருக்களின் கூட்டத்தினர்... இருளினின்று தமது வியத்தகு ஒளிக்கு அழைத்துள்ளவரின் மேன்மைமிக்க செயல்களை அறிவிப்பது உங்கள் பணி” (1 பேதுரு 2:9)

இது நமது அழைப்பு. கடவுளின் மக்களாக ஒன்றாக நடப்பது. ஒருவருக்கொருவர் கிறிஸ்துவை காண்பது. நமக்காக மட்டுமல்ல; உலகிற்காகவும் எதிர்நோக்கின் பயணிகளாக திகழ்வது.

ஏழைகள் நம்மைக் காப்பாற்றுகிறார்கள். ஏனென்றால் இயேசு கிறிஸ்துவின் முகத்தை எதிர்கொள்ள நமக்கு அவர்கள் உதவுகிறார்கள்.

*திருத்தந்தை பிரான்சிஸ்*

**இன்றைய இறைவார்த்தை:**

திருத்தூதர் பணி: 7: 55-60

திருப்பாடல்: 97: 1-2, 6-7, 9

திருவெளிப்பாடு: 22:12-14, 16-17,20

யோவான்: 17: 20-26

INTERNAL CIRCULATION ONLY
BUL 22/2025

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org